**இஸ்லாமிய சமய மன்றம் (சிங்கப்பூர்)**

**வெள்ளிக்கிழமைப் பிரசங்கம்**

**27 மே 2016 / 20 ஷஃபான் 1437**

**<u>கிருபையின் தூதைப் பரப்புதல்</u>**

اَلْحَمْدُ للهِ الْغَنِيِّ الْحَمِيْدِ وَأَشْهَدُ أَنْ لَا إِلَهَ إِلاَّ اللهُ وَحْدَهُ لاَ شَرِيْكَ لَه، وَهُوَ عَلَى كُلِّ شَيْءٍ شَهِيْد، وَأَشْهَدُ أَنَّ سَيِّدَنَا مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُوْلُه الْمَبْعُوثُ بِالرَّحْمَةِ وَالْقَوْلِ السَّدِيْد، اَللّهُمَّ صَلِّ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَى آلِهِ وَصَحْبِهِ وَسَلِّمْ تَسْلِيْمًا كَثِيْرًا. أَمَّا بَعْدُ، فَيَا عِبَادَ اللهِ اتَّقُوْا اللهَ حَقَّ تُقَاتِهِ وَلَا تَمُوْتُنَّ إِلَّا وَأَنْتُمْ مُسْلِمُوْن.

வெள்ளிக்கிழமையில் ஒன்று கூடியுள்ள அருள்மிக்க ஜமாஅத்தார்களே!

இன்னும் சில நாட்களில், உலகில் உள்ள முஸ்லிம்கள் அனைவரும் புனிதமிக்க ரமதான் மாதத்தில் காலடி எடுத்து வைக்க இருக்கின்றார்கள். எனவே, நாம் தற்போது இருக்கும் ஷஃபான் மாதத்தின் மீதமுள்ள நாட்களில் ரமதான் மாதத்தை வரவேற்பதில் அதிக ஆர்வத்துடன் ஈடுபடுவோமாக! நமது திட்டங்களிலும் முயற்சிகளிலும் அல்லாஹ் அஸ்ஸ வஜல்ல ”பரக்கத்” (அபிவிருத்தியை) ஏற்படுத்துவானாக!

ஜமாஅத்தார்களே!

முஹம்மது (ஸல்) அவர்களை இறைத்தூதராக அனுப்பியதன் நோக்கத்தை, அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா திருக்குர்ஆனில் பின்வருமாறு தெளிவாகக் கூறுகிறான்:

وَمَآ أَرۡسَلۡنَٰكَ إِلَّا رَحۡمَةٗ لِّلۡعَٰلَمِينَ ١٠٧

பொருள்: (நபியே!) நாம் உம்மை அகிலத்தார் அனைவருக்கும் ரஹ்மத்தாக - ஓர் அருட்கொடையாகவேயன்றி அனுப்பவில்லை. (அல்-அன்பியா: 107)

மேற்கண்ட வசனத்தை ஆய்வு செய்து பார்த்தால், முஸ்லிம்களாகிய நாம் சிந்திப்பதற்கு இரு முக்கிய, சுவாரஸ்யமான விஷயங்கள் அதில் இருப்பதைக் காணலாம். **முதன்முதலாக**, அனைவருக்கும் அருளாக உள்ள இஸ்லாத்தின் தூதை பரப்புவதற்காகவே இறைத்தூதர் முஹம்மது(ஸல்) அவர்களை அல்லாஹ் அனுப்பினான் என்பது புலனாகிறது. **இரண்டாவதாக**, இறைத்தூதர் முஹம்மது(ஸல்) அவர்களே கூட அல்லாஹ்வின் புறத்திலிருந்து அகிலத்தார் அனைவருக்கும் அருளாக அனுப்பப்பட்ட நபராக இருப்பதைக் காணலாம்.

மேற்கண்ட இரு விஷயங்களின் மூலம், ரசூலுல்லாஹி(ஸல்) அவர்கள் எங்கெல்லாம் சென்றார்களோ, இருந்தார்களோ அங்கெல்லாம் அருள்களும் கிருபைகளும் அமைதி மற்றும் நன்மைகளும் பிரகாசித்தன என்பதைப் புரிந்து கொள்ள முடிகிறது.

இறைத்தூதர் (ஸல்) அவர்களின் இதே மாதிரியான கிருபை, ஸஹாபாக்கள், தாபியீன்கள் மற்றும் தபவுத் தாபிஈன்களின் வாழ்க்கையை

வண்ண மயமாக்கி, உலகின் பல்வேறு பகுதிகளில் அவர்கள் இஸ்லாத்தின் தூதைக் கொண்டு சென்ற போது அதனைப் பிரகாசிக்கச் செய்தது. மேற்கண்ட மக்கள் சிறந்த மதிப்பீடுகளையும் கொள்கைகளையும் மனிதர்கள் அனைவரிடமும் பரப்புவதில் கடின முயற்சி செய்தார்கள். அவர்களின் முயற்சிகள் அவர்கள் அமைதியைப் பரப்புவதில் ஆர்வத்துடன், முன்னணியில் இருந்தார்கள் என்பதையும் உறுதி செய்வதாக இருந்தன. எனவே தான், திருக்குர்ஆனில் அல்லாஹ் அவர்களைப் புகழும் புகழுக்குத் தகுதியானவர்களாக அவர்கள் ஆனார்கள். அல்லாஹ் திருக்குர்ஆனின் ”அல்-பகரா” எனும் அத்தியாயத்தின் 143-வது வசனத்தில் கூறுகின்றான்:

وَكَذَٰلِكَ جَعَلْنَٰكُمْ أُمَّةً وَسَطًا لِّتَكُونُوا۟ شُهَدَآءَ عَلَى ٱلنَّاسِ

وَيَكُونَ ٱلرَّسُولُ عَلَيْكُمْ شَهِيدًا ۗ

பொருள்: இதே முறையில் நாம் உங்களை ஒரு நடுநிலையுள்ள உம்மத்தாக (சமுதாயமாக) ஆக்கியுள்ளோம்; (அப்படி ஆக்கியது) நீங்கள் மற்ற மனிதர்களுக்குச் சாட்சியாளர்களாக இருப்பதற்காகவும், ரஸூல் (நம் தூதர்) உங்கள் சாட்சியாளராக இருப்பதற்காகவுமேயாகும்.

வெள்ளிக்கிழமையில் ஒன்று கூடியுள்ள அருள்மிக்க ஜமாஅத்தார்களே!

நன்மையைச் செய்ய விரும்புவதும், மற்றவர்களுக்குப் பயனளிப்பதற்காக விரைந்து செல்வதும், முஸ்லிம்களுக்கு மட்டுமல்லாமல் உலக மக்கள்

அனைவருக்கும் பயன் தரும் நன்மைகளைச் செய்வதில் முன்னணியில் இருப்பதும், அவற்றில் அதிக ஆர்வம் காட்டுவதும் இஸ்லாமிய மார்க்கத்தில் மிக உறுதியாக ஆர்வமூட்டப்பட்டுள்ளது. ரசூலுல்லாஹி(ஸல்) நவின்றுள்ளார்கள்:

لَنْ يَشْبَعَ الْمُؤْمِنُ مِنْ خَيْرٍ يَسْمَعُهُ حَتَّى يَكُوْنَ مُنْتَهَاهُ الْجَنَّة

பொருள்: ஒரு "முஃமின்" (ஓரிறை நம்பிக்கையாளர்), தான் செய்த நன்மையான காரியங்களைக் கொண்டு திருப்தி பெறமாட்டார். அவருக்கு மரணம் ஏற்பட்டு, சொர்க்கத்தை அவர் அடையும் வரை மேற்கொண்டு நன்மைகளைச் செய்ய வேண்டுமென கடின முயற்சி செய்வார். (ஹதீதைப் பதிவு செய்து அறிவிப்பவர்: இமாம் திர்மிதி ரஹ்)

அனைவருக்கும் நன்மைகளைச் செய்ய பல வாய்ப்புகள் உள்ளன. இமாம் அந்நவவீ (ரஹ்) அவர்கள் தனது "ரியாதுஸ் ஸாலிஹீன்" எனும் ஹதீதுக் கிரந்தத்தில் "நன்மை செய்வதற்கான பல வழிமுறைகள்" எனும் தலைப்பில் ஒரு தனி அத்தியாயத்தையே ஏற்படுத்தியுள்ளார்கள். அந்த அத்தியாயத்தில் மனிதர்கள், விலங்குகள், சுற்றுப் புறச் சூழல்கள் ஆகிய அனைத்துக்கும் நன்மைகளைச் செய்யத் தூண்டும் பல்வேறு ஹதீதுகளைத் தொகுத்துள்ளார்கள்.

இதனடிப்படையில், தற்கால முஸ்லிம்கள் திருக்குர்ஆனில் காணப்படும் உலகளாவியச் சிந்தனைகள், கொள்கைகள் மற்றும் மதிப்பீடுகளில் கவனம் செலுத்தி, அவற்றில் நம்பிக்கை கொள்ள வேண்டும். முஸ்லிம்கள்

எங்கிருந்தாலும், குறிப்பாக, மற்றவர்களுடன் பழகும் போது நன்மைகளைச் செய்வதில் முன்னணியில் இருக்க வேண்டும்.

அன்பிற்குரிய ஜமாஅத்தார்களே!

தொடர்ந்து மூன்று வாரங்களாக, முஸ்லிம்கள் மற்றும் முஸ்லிமல்லாதவர்கள் அனைவரிடமும் சீரான உறவுகளை ஏற்படுத்திக் கொள்வதின் முக்கியத்துவத்தைப் பற்றி வெள்ளிக்கிழமை ஜும்ஆப் பிரசங்கங்களில் விவாதிக்கப்பட்டது.

மற்றவர்களுடன் பழகும் போது, அகிலத்தார் அனைவருக்கும் கிருபை காட்டி, அவர்களுக்கு அருள்களை ஏற்படுத்திய ரசூலுல்லாஹி(ஸல்) அவர்களின் நன்னடத்தையை ஆர்வத்துடன் பின்பற்றுவோமாக! நாம் நமது செயல்களில் முன்மாதிரியான முஸ்லிம்களாக அமைவோமாக! நமது சொற்களும் செயல்களும் சிறந்தவையாக இருப்பதையும், இஸ்லாத்தின் அழகியப் போதனைகளை மறைக்கின்ற கெட்ட நடத்தைகளாக இல்லாமலிருப்பதையும் உறுதி செய்வோமாக!

ரமதான் மாதம் நெருங்கி வரும் வேளையில், பல்வேறு பொதுநலச் சேவைகளில் பங்கெடுத்துக் கொள்வதில் நமது சமுதாயம் அதிக சுறுசுறுப்புடன் காணப்பட வேண்டுமென நினைவூட்டப்படுகிறது. நம்முடன் பழகும் ஒவ்வொரு நபரும் - அவர்கள் எந்த மதத்தை அல்லது இனத்தைச் சேர்ந்தவராக இருப்பினும்- நம்மிடமிருந்து அருள்களையும் கிருபையையும் உணர வேண்டும். உதாரணமாக, நமது உணவுகளில் சிலவற்றை நமது அண்டை வீடுகளில் வசிக்கும் முஸ்லிம்கள் மற்றும் முஸ்லிம் அல்லாதவர்களிடம் பகிர்ந்து கொள்ளும் பாரம்பரிய வழக்கங்கள் நம்மிடம் காணப்படுகிறது. அவற்றைத் தொடர்ந்து பற்றிப் பிடிப்பது அவசியமாகும்.

இந்த நல்ல பழக்கமானது, தொடர் அமைதியையும், புரிந்துணர்வையும், ஒருவருக்கொருவர் மரியாதை செய்து கொள்வதையும் ஏற்படுத்தும். ஜமாஅத்தார்களே! உலகின் பல்வேறு பகுதிகளில் அதிக அளவில் போர்களும், சண்டை சச்சரவுகளும் நிகழ்வதைக் காண்கிறோம். இந்நிலையில், நம்மை அமைதியின் முன்னோடிகளாக ஆக்க வேண்டுமென எல்லாம் வல்ல அல்லாஹ்விடம் வேண்டிக் கொள்வோமாக! அமைதியை ஏற்படுத்துவதற்கான ஆற்றலை நமது கைகளிலும், அடுத்து வரும் சந்ததிகளிலும் வழங்குமாறும் அல்லாஹ்விடம் வேண்டிக் கொள்வோமாக!

வெள்ளிக்கிழமையில் ஒன்று கூடியுள்ள அருள்மிக்க ஜமாஅத்தார்களே!

ஷஃபான் மாதத்தின் இந்த இறுதி நாட்களில் நாம் அனைவரும் இணைந்து நம்மைப் பற்றி சிந்திப்போமாக! அனைவருக்கும் நன்மைகளையும் அமைதி மற்றும் அபிவிருத்திகளையும் விரும்பும் முஸ்லிம் சமுதாயம் எனும் ரீதியில், நம்மை நாம் ”முஹாசபா” (சுய பரிசோதனை) செய்து கொள்வோமாக! ”முஹாசபா” செய்து கொள்வதானது நாம் எங்கிருந்தாலும் அருள்களைப் பிரகாசிக்கச் செய்யும் சமுதாயமாக நம்மை ஆக்கும். அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவிடம் பிரார்த்தனை செய்து நமது கரங்களை உயர்த்துவோமாக! நமது துஆக்களை (பிரார்த்தனைகளை) அல்லாஹ் ஏற்றுக் கொள்வானாக!

அல்லாஹும்ம யா ரஹ்மான், யா ரஹீம்

ஷஃபான் மாதத்தின் இந்த இறுதி நாட்களில் உனது கிருபையையும் திருப்தியையும் எதிர்பார்த்தவர்களாக இருக்கின்றோம். உனது உதவியின்றி எங்களால் எதுவும் செய்ய இயலாது.

யா அல்லாஹ்! உனது அன்பை எங்கள் மீது பொழிவாயாக! உனது ”இனாயத்” (உதவியைக்) கொண்டு எங்களுக்கு உதவுவாயாக! உன் மீது அன்பு கொள்வதற்காக எங்களுக்கிடையே உறவைப் பலப்படுத்துவாயாக! எங்களின் தவறுகளையும் பாவங்களையும் மன்னிப்பாயாக! எங்களின் நற்காரியங்களையும் வணக்க வழிபாட்டுச் செயல்களையும் ஏற்று, அவற்றுக்கு அபரிவிதமான நன்மைகளை வழங்குவாயாக!

அல்லாஹும்ம யா கபீர், யா அலீம்

வரும் ரமதான் மாதத்தை, எங்களின் உள்ளங்களையும் ஆன்மாக்களையும் பரிசுத்தமாக்கும் மாதமாகவும், மனிதகுலத்தின் மீது அன்பு கொள்வது, நன்றி செலுத்தும் உணர்வு, ஒருவர் மற்றவர் மீது கிருபை காட்டி அன்பு செலுத்துதல் ஆகியவற்றை எங்களிடம் அதிகரிப்பதாகவும், எங்களின் நம்பிக்கையைப் பலப்படுத்துவதாகவும், அகிலத்தார் அனைவருக்கும் கருணைச் சிந்தனையை ஏற்படுத்துவதாகவும் ஆக்குமாறு உன்னிடம் வேண்டிக் கொள்கிறோம். ஆமீன். யாரப்பல் ஆலமீன்.

بَارَكَ اللهُ لِي وَلَكُمْ فِي الْقُرْآنِ الْعَظِيْمِ، وَنَفَعَنِي وَإِيَّاكُمْ بِمَا فِيْهِ مِنَ الآيَاتِ وَالذِّكْرِ الْحَكِيْمِ، وَتَقَبَّلَ مِنِّي وَمِنْكُمْ تِلَاوَتَهُ إِنَّهُ هُوَ السَّمِيْعُ الْعَلِيْمُ، أَقُوْلُ قَوْلِي هَذَا وَأَسْتَغْفِرُ اللهَ الْعَظِيْمَ لِي وَلَكُمْ، وَلِسَائِرِ الْمُسْلِمِيْنَ وَالْمُسْلِمَاتِ، وَالْمُؤْمِنِيْنَ وَالْمُؤْمِنَاتِ، فَاسْتَغْفِرُوْهُ فَيَا فَوْزَ الْمُسْتَغْفِرِيْنَ وَيَا نَجَاةَ التَّائِبِيْنَ.